**கவனிக்க.**- *02.11.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2045 - 2017 නොවැම්බර් මස 10 වැනි සිකුරාදා - 2017.11.10

*2045 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
| --- | --- |
| பதவிகள் - வெற்றிடம் | *2020* |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *2024* |

**கவனிக்க.**- (i) இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையம் (திருத்தம்) சட்டமூலம் 2017, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) நம்பிக்கைப் பொறுப்புக்கள் (திருத்தம்) சட்டமூலம் 2017, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப்பத்திரிகையில்பிரசுரமாகும்சகல அறிவித்தல்களும்,அவைபிரசுரமாகும்திகதிக்குஇரண்டுவாரங்களுக்குமுன்னர், அதாவது 2017, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும்பிரகடனம்,விதி,ஒழுங்குவிதி,கட்டளை,துணைவிதி,அறிவிப்பு அல்லது வேறு விடயம்வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி,அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின்,அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2017 - B81224 - 5,403 (2017/11)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து **சிங்கள மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து **தமிழ் மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, **சிங்கள மொழி** :யில் அல்லது **தமிழ் மொழி** :யில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக்காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 **சிங்கள மொழி** : மூலத்தில் அல்லது **தமிழ் மொழி** : மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்றுவீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப்பிரமாணக்குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக்குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச்சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக்குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாகயாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமைகொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும்படை, விமானத்தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புபடை என்பனவற்றிலும் முழுநேரக்கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்குள் எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(V) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்குமுன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவிபெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும்பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்குமாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(V) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இருபக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(X) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை தநேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும்வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

B 3 - B81224

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கைப் பொலிஸ்

பொலிஸ் கொஸ்தாபல் பதவி - விசேட அதிரடிப்படை

இலங்கைப் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு நேரடி ஆட்சேர்ப்புக்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2018.01.10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 3,54,480 - 7 X 3,600 - 27 X 4,440 - ரூபா 4,99,560.

2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 வரை சம்பளம் பொது நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 3-2016 இன் பட்டோலை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 முதல் முழுமையான சம்பள அளவுத் திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/ 2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்களாவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர் :

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : 7,800 ரூபா ;
(ஆ) மாதாந்த வேதனத்தில் 40 வீதக் கொடுப்பனவு 5,712 ரூபா ;
(இ) ஊக்குவிப்புக் கொடுப்பனவு : 1,500 ரூபா
(ஈ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு 250 ரூபா ;
(உ) மாதாந்த சம்பளத்தில் 1/ 4 கொடுப்பனவு 3,570 ரூபா ;
(ஊ) கடினக் கொடுப்பனவுகள் : 2,000 ரூபா ;
(எ) இணைந்த கொடுப்பனவுகள் : 10,500 ரூபா (350 X 30 விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்) ;
(ஏ) இணைந்த கொடுப்பனவுகள் : 8,400 ரூபா (350 X 24 விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசம்)

இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் வைத்திய சிகிச்சைகளைப் பெறுவதற்கு நிதி மூலமான உதவித்தொகைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படும் ;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

(ஊ) விசேட அதிரடிப்படையின் அடிப்படைப் பயிற்சியை முடித்து விசேட அதிரடிப் படையின் சேவையில் ஈடுபடும் காலப்பகுதியில் மாத்திரம் விசேட அதிரடிப் படையின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விசேட கொடுப்பனவுகளைப் பெறுவதற்கான உரிமையுண்டு.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) ***வயதெல்லை.***- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே இலங்கை பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்ப முடிவுத் திகதியன்று 27 வயதிற்கு உட்பட்டவர்களாக இருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(ஆ) ***கல்வித் தகைமைகள்.***- க. பொ. த. (சா. தர) பரீட்சையில் கணிதம் மற்றும் தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அவற்றுள் கணிதம், தாய்மொழி இரண்டு பாடங்களிலும் அல்லது அவற்றுள் ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் :

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள்

ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க.பொ. த. (சா. தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படும்.

**குறிப்பு 3**.- விருப்பத்திற்குரிய தமிழ்/ ஆங்கிலம்/ சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாகக் கருதப்பட மாட்டாது.

(இ) ***பௌதீக தகைமைகள் :***

* உயரம் : 5 அடி 4 அங்குலம் (ஆகக் குறைந்தது)

* மார்பு : 30 அங்குலம் (ஆகக்குறைந்தது மூச்சுவிட்ட நிலையில்)

**குறிப்பு 1**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடன் தேசிய விளையாட்டுக் குழாத்திலிருந்து தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதீக தகைமைகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி தகைமை பெறுவர்.

(ஈ) ***பார்வை தொடர்பான தேவை***.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/ 6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் சேவைக்கு தகைமை அற்றவராவார்.

(உ) ***பிற தகைமைகள்***.- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் (விவாகரத்து பெற்றவர்கள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்). மற்றைய தகைமைகள் உடைய ஏற்கனவே இலங்கை பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இந்நிபந்தனை மாத்திரம் ஏற்புடையதாகாது.

5. ***ஆட்சேர்ப்பு முறை***.- விண்ணப்பங்களின்படி தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் இலங்கை பொலிஸினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.-

**உடற் தகுதிப் பரீட்சை :**

| பயிற்சி | தடவைகள் | நேரம் (நிமிடத்தில்) |
|---|---|---|
| 1000 மீற்றர் ஓட்டம் | - | 04 |
| சின்அப்ஸ் (Chin ups) | 05 | 01 |
| புஷ் அப்ஸ் (Push ups) | 15 | 01 |
| சிடப் (Sit ups) | 15 | 01 |
| ஸ்கொட் டிரஷ் (Scott thrush) | 12 | 01 |

- உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இந்நேர்முகப் பரீட்சையில் 40 அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக கட்டுரை எழுதுதல்.
* பொது அறிவும் மற்றும் நுண்ணறிவு பரீட்சைக் காலம் (1 மணித்தியாலம்)

6. **மருத்துவப் பரிசோதனை :**

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின்படி தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணைகள்**.- (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பின்னணி விசாரணைகளில் ஏதேனும் பாதகமான காரணங்கள் இருந்தால் அவ்விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அல்லது மூடி மறைப்பது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

8. **அரச கரும மொழிக் கொள்கையை அமுல் படுத்துதல் :**

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/ 2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியை சேவையில் இணைந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் உரிய இரண்டாம் மொழித் தேர்ச்சியயைப் பெறாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

9. **நியமனக் கொள்கைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு கால பயிலுநர் அடிப்படையில் இருக்கும்.

(ஆ)தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே விதிக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் விதிக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக்கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளிலான ஏற்பாடுகளுக்கும், நிதி ஒழுங்கு விதிகள், பொலிஸ் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இலங்கை பொலிஸினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பகுதி II பொலிஸ் வர்த்தமானியின் பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 1952/ 2006 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரமும், 2007.08.09 ஆந் திகதிய திருத்தஞ் செய்யப்பட்ட அச்சுற்றுநிருபத்தின் பிரகாரமும் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களைத் தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் இலங்கை பொலிஸில் பணியாற்ற வேண்டியதுடன் இப்பயிலுநர் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்ளலானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியா யத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக 1693/ 2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்று கோவையினை பின்பற்றுவதாக சத்தியப்பிரமாணம்/ உறுதி செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அபிமானம்மிக்க அரச சேவைக்கான அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சுய உறுதி செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் தமது பதவியில் உறுதிப்படுத்திய பின் இலங்கை பொலிஸில் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இன் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட அரச சேவை பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய பொது நிபந்தனைகள் செல்லுபடியாகும்.

(ஆ)1990.03.10 ஆந் திகதிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய புறக் கிருத்தி செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின் மாத்திரம்) ;

(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி ;

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்ப தாரர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணபப்படிவத்தைத் தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் எந்த உத்தியோகத்தரிடமும் விண்ணப்பங்களை பிரத்தியேகமாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பூஜித் ஜயசுந்தர,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| 1 1/2" x 2" அளவு |
|---|

(அலுவலக உபயோகத்திற்கு)

**இலங்கை பொலிஸ்**

பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி -
விசேட அதிரடிப் படை

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பிரதேச செயலகப் பிரிவு :-----.
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(உ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :-----.
பிரதேச செயலகம் :-----.
(ஊ) கடிதம் அனுப்பும் முகவரி :----.
(எ) தொலைபேசி இலக்கம் (இருப்பின்) வதிவிடம் :-----.
கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.
(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----
(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு அதாவது 10.01.2018 ஆந் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----;
மார்பு : (அங்குலம்) :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/ திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/ தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ)-----.
(ஆ)-----.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? :----.
ஆம் எனின் பதவி மற்றும் வழங்கப்பட்ட இலக்கம் :----.
அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக ? :-----.

16. (அ) நீங்கள் ஆயுதப்படை சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கின்றீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் :-----.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின் ஏதேனும் குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ...................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும் இடப்பட வேண்டும்.

பதவி :-----.
திகதி :-----.

11-400

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சு

*நாட்டில் உள்ள தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்விச் செயற்திட்டத்தின் கீழ் தொழில்சார் பாடங்களுக்காக சிங்கள மற்றும் தமிழ்மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை 3-1(அ) தரத்திற்கு பட்டதாரிகளை சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2017*

01. நாட்டில் உள்ள தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள மற்றும் தமிழ்மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை 3-1(அ) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தகுதிபெற்ற இலங்கைப் பிரசைகள் ஆண், பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் காணப்படுகின்ற மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2017.12.11 ஆம் திகதி அல்லது

அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம் த.பெ. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மேலும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணபப்ப்படிவங்களில் தமிழ்மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் இடம்பெற வேண்டும். விண்ணபப்ப்படிவங்கள் அனுப்பப்படுகின்ற கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "தொழில்சார் பாடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3-1(அ) தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2017" என கட்டாயமாக குறிப்பிடுதல் வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணபப்ப்படிவங்கள் அல்லது இது தொடர்பான கடிதங்கள் தபாலில் தொலைந்து விட்டது என்றோ அல்லது தாமதமாகிவிட்டதென்றோ கூறப்படுகின்ற முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. விண்ணபப்ப்படிவங்கள் தபாலிலிடும் இறுதித் திகதி வரைக்கும் தாமதமாவதினால் ஏற்படும் இழப்புகள் குறித்து விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

2. **சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் முறை** :

2.1 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற எழுத்துமூல போட்டிப் பரீட்சையின் சகல வினாப்பத்திரங்களுக்கும்தோற்றிஒவ்வொருவினாப்பத்திரத்திற்கும்குறைந்தளவு 40%வீதமாகியபுள்ளிகளை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளின் மொத்த புள்ளிகளின் கூட்டுத்தொகையினது முன்னுரிமை அடிப்படையில் பொது நேர்முகத் தேர்வுக்கும் செயன்முறை பரீட்சைக்கும் முன்னிலைப் படுத்தி பாடசாலை மட்ட முறைமையின் அடிப்படையில் நிலவும் வெற்றிடத் தொகைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு இடம்பெறும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் கோரப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வின் போது நிராகரிக்கப்படுவர்.

2.2 ஒரு விண்ணப்பதாரிக்கு தான் பெற்றுள்ள அடிப்படைப் பட்டத்திற்கேற்ப அதிகபட்சம் 03 பாடங்களுக்கு விண்ணப்பிக்கமுடியும்.

2.3 வெற்றிடம் காணப்படும் பாடசாலைகளை நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரிகளுக்கு காட்சிப் படுத்தப்படும்.

2.4 இவ்வெற்றிடங்களுக்கு பாடசாலை மட்ட முறைமையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதால் நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து ஆகக் குறைந்தது 05 வருடங்கள் முடிவுறும்வரை எக்காரணம் கொண்டும் இடமாற்றம் வழங்கப்படமாட்டாது.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்** :

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. பதவிக்குரிய ஓய்வூதிய முறைமை பற்றி அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

(ii) இப்பதவிக்குநியமனம்பெறுகின்றஉத்தியோகத்தர்கள்மூன்று(03)வருடதகுதிகாண்காலத்திற்குஉட்படுவதோடு அம்மூன்று வருடங்களினுள் முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை 01/ 2014 மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றுநிருபங்களுக்கு ஏற்ப அரச மொழிகள் தொடர்பான தேர்ச்சியினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) அரச சேவை ஆணைக்குழுவின் செயன்முறை சட்டதிட்டங்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும் அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்களுக்கும் திணைக்களம் சார் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் கட்டுப்பட்டதாகும்.

(v) 2014.10.23 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1885/38 கொண்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்கும் அந்த பிரமாணக் குறிப்பிற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களுக்கும் அரச சேவை நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கும் இந்நியமனம் கட்டுப்பட்டதாகும்.

4. **சம்பள அளவுத் திட்டம்**.- இந்தப் பதவிக்கு பொதுநிர்வாக சுற்றுநிருப இலக்கம் 03/ 2016 கொண்ட சம்பள சுற்றுநிருபத்திற்கேற்ப G-E-01-2016 இல் ரூபா 27,740-300 x 6-380 x 7-445 x 2-ரூபா 33,090 (மாதாந்த) சம்பள அளவு உரித்தாகும். நீங்கள் அந்த சம்பள அளவுத் திட்டத்தில் 14 ஆவது சம்பளப் படியாகிய 32,200/- இல் அமர்த்தப்படுவீர்கள். சம்பளம் வழங்கல் நடவடிக்கையை மேற்கொள்வது அச்சுற்றுநிருபத்தின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்குஏற்பவே. இதற்குமேலதிகமாக அரச உத்தியோகத்தர்களுக்கு அரசினால் காலத்திற்குக்காலம் வழங்கப்படுகின்ற ஏனைய கொடுப்பனவுகளும் உங்களுக்கு உரித்தாகும்.

5. **கல்வித் தகைமைகள் :**

5.1 இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக்குறிப்பின் விதிமுறைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் வழங்குகின்ற நிறுவனம் ஒன்றில் 2017.12.11 ஆந்திகதிக்கு முன் அமுலாகும்படி பட்டமொன்றை பெற்றிருப்பதுடன் விண்ணப்பிக்கின்ற பாடத்தை பட்டத்தின் பிரதான பாடமொன்றாக கற்றிருப்பது கட்டாயமாகும்.

**குறிப்பு**.- பின்வருமாறு ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் ஆகக் குறைந்த தகைமைகளாகக் கொள்ளப்படும்.

| தொடர் எண் | பாடம் | தகைமைகள் |
|---|---|---|
| 01 | Child Psychology and care<br>குழந்தை உளவியல் மற்றும் பராமரிப்பு | சிறுவர் உளவியலை ஒரு பாடமாகக் கொண்ட பட்டம் அல்லது சிறுவர் உளவியல் மற்றும் பாதுகாப்பு என்ற விடயத்தை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 02 | Health and Social Care<br>சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு | சுகாதாரம் நலனோம்பல் விஞ்ஞானமாணி பட்டம் அல்லது சுகாதாரமும் சமூக பாதுகாப்பையும் பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 03 | Physical Education and Sports<br>உடற்கல்வி மற்றும் விளையாட்டு | விளையாட்டு விஞ்ஞான மற்றும் முகாமைத் துவம் தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது விஞ்ஞானமாணி (உடற்கல்வி) விசேட பட்டம் அல்லது உடற்கல்வி மற்றும் விளையாட்டை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 04 | Performing arts<br>அரங்கற் கலை | அரங்கற் கலை தொடர்பான விசேட பட்டம் அல்லது இளமானி (விசேடம்) அரங்கற் கலைப் பட்டம் அல்லது நாட்டியமும் அரங்கற் கலையும் பற்றிய விசேட பட்டம் அல்லது அரங்கற்கலையை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 05 | Event Management<br>நிகழ்ச்சி முகாமை | விருந்தோம்பல், உல்லாசத்துறை மற்றும் நிகழ்ச்சி தொடர்பான முகாமைத்துவப் பட்டம் அல்லது நிகழ்ச்சி முகாமையை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 06 | Arts and Crafts<br>கலை மற்றும் கைவினை | கட்புலக் கலை தொடர்பான விசேட பட்டம் (சித்திரக்கலை) அல்லது கட்புல கலை மற்றும் திட்டமிடுதல் (சித்திரம் மற்றும் கைவினை) அல்லது கட்புல மற்றும் நுட்பக் கலை பட்டம் அல்லது கவின் கலை தொடர்பான பட்டம் அல்லது கைவினைக் கலையை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 07 | Interior Designing<br>உள்ளக வடிவமைப்பு | வடிவமைப்புத் தொடர்பான பட்டம் அல்லது உள்ளக வடிவமைப்பை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 08 | Fashion Designing<br>நவநாகரிக வடிவமைப்பு | நவநாகரிக வடிவமைப்பு தொடர்பான பட்டம் அல்லது கட்புல கலை தொடர்பான விசேட பட்டம் (ஆடைகள் மற்றும் புடவைக் கலை) அல்லது நவநாகரிக வடிவமைப்பு மற்றும் உற்பத்தி மேலோங்கல் தொடர்பான பட்டம் அல்லது நவநாகரிக வடிவமைப்பினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |

| தொடர் எண் | பாடம் | தகைமைகள் |
|---|---|---|
| 09 | Graphic Designing<br>வரைபடம் வடிவமைப்பு | வடிவமைத்தல்தொடர்பானபட்டம்அல்லது கட்புலகலை மற்றும் திட்டமிடல் தொடர்பான இளமாணிப் பட்டம் (சித்திரம் மற்றும் வரைபடம்) அல்லது கணினி பொறியியல் நுட்பம் தொடர்பான பொறியியல் விஞ்ஞானமாணி பட்டம் அல்லது கணினி விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது தகவல்மற்றும்தொடர்பாடல்தொழில்நுட்பம் தொடர்பான பட்டம் அல்லது பட்டத்திற்கு பிரதான பாடமாக தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் ஒரு பாடமாகக் கொண்ட பட்டம். அல்லது கணினி விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணி பட்டம் அல்லது வரைபடம் வடிவமைத்தலை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 10 | Art and Designing<br>கலை மற்றும் வடிவமைப்பு | கட்டுமானத்துறை தொடர்பான பட்டம் அல்லது கட்புல கலை தொடர்பான விசேட பட்டம் (சித்திரக் கலை) அல்லது சித்திரம் மற்றும் கட்டுமானம் தொடர்பான பட்டம் அல்லது கட்புலம் மற்றும் தொழில்நுட்பக் கலை பட்டம் அல்லது கலை மற்றும் வடிவமைப்பினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 11 | Landscaping<br>நிலத்தோற்ற வடிவமைப்பு | விவசாயம் தொடர்பான விசேட பட்டம் (பூங்காவனவியல் சிறப்புத் தன்மையுடன்) அல்லது பூங்காவனவியல், பூஞ்செடி வளர்ப்பு மற்றும் நிலத்தோற்ற வடிவமைப்பு தொடர்பான இளமாணிப் பட்டம் அல்லது நிலத்தோற்ற வடிவமைத்தலை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 12 | Applied Horticultural Studies<br>பிரயோக தோட்டக்கலைக் கற்கை | விவசாயம் தொடர்பான விஞ்ஞானமாணி விசேட பட்டம் (பூங்காவனவியல் சிறப்பு கற்கையுடன்) அல்லது பூங்காவனவியல், பூஞ்செடி வளர்ப்பு மற்றும் நிலத்தோற்ற வடிவமைப்பு தொடர்பான இளமாணிப் பட்டம் அல்லது பிரயோக பூங்காவனவியல் தொழில்நுட்பத்தை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் |
| 13 | Livestock Product Studies<br>கால்நடை உற்பத்தி தொழில்நுட்பக் கல்வி | விவசாயம் தொடர்பான விஞ்ஞானமாணி விசேட பட்டம் (விலங்கியல் விஞ்ஞான சிறப்புடன்) அல்லது விலங்கியல் மீன் வளர்ப்புக் கலை தொடர்பான இளமாணிப் பட்டம் அல்லது விலங்கியல் தொழில்நுட்பத்தை பிரதான பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது கால்நடை உற்பத்தி தொழில்நுட்பத்தை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |

| தொடர் எண் | பாடம் | தகைமைகள் |
|---|---|---|
| 14 | Food Processing Studies<br>உணவு பதப்படுத்தும் கல்வி | விவசாயம் தொடர்பான விஞ்ஞானமாணி விசேட பட்டம் (உணவு விஞ்ஞானமாணி மற்றும் தொழில்நுட்ப சிறப்புக் கற்கையுடன்) அல்லது உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான இளமாணி பட்டம் அல்லது உணவு விஞ்ஞானம் மற்றும் போஷாக்கு தொடர்பான இளமாணி பட்டம் அல்லது உணவு உற்பத்தி தொழில்நுட்பம் அல்லது உணவு தயாரித்தல் தொழில்நுட்ப பட்டம். |
| 15 | Aquatic Resource Studies<br>நீர்வாழ் வள தொழில்நுட்பக் கல்வி | விவசாயம் தொடர்பான விஞ்ஞானமாணி விசேட பட்டம் (நீர்வாழ் விஞ்ஞானம் தொடர்பான சிறப்பு கற்கையுடன்) அல்லது நீர்வாழ் வள முகாமைத்துவம் மற்றும் விலங்கியல் விஞ்ஞானம் தொடர்பான விசேட பட்டம் அல்லது விலங்கு முகாமை மற்றும் மீன்வள விஞ்ஞானம் பற்றிய விஞ்ஞானமாணி பட்டம் அல்லது பட்டத்திற் கான பிரதான பாடமாக நீர்வள முகாமை பாடம்உள்ளடங்கியவிஞ்ஞானமாணிபட்டம் அல்லதுநீர்வளமுகாமைதொழில்நுட்பத்தை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 16 | Plantation Product Studies<br>தோட்ட பயிற்செய்கை உற்பத்தி தொழில்நுட்பக் கல்வி | விவசாயம் தொடர்பான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது ஏற்றுமதி விவசாயம் பற்றிய இளமாணி பட்டம் அல்லது தோட்டப் பயிர்செய்கை உற்பத்தி தொழில்நுட்பத்தை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 17 | Construction Studies<br>நிர்மாணக் கல்வி | சிவில் பொறியியலாளர் முறைமை தொடர் பான பொறியியல் விஞ்ஞான பட்டம் அல்லது கட்டுமானம் மற்றும் கட்டிட சேவை தொழில்நுட்பம் உள்ளடங்கிய பொறியியல் தொழில்நுட்ப பட்டம் அல்லது தொழிநுட்பவியல்பட்டம்அல்லதுகட்டுமான தொழில்நுட்பத்தை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 18 | Automobile Studies<br>மோட்டார் இயந்திரக் கல்வி | தொழில்நுட்பவியல் பட்டம் (மோட்டார் இயந்திரவியல்) அல்லது விஞ்ஞானமாணி பொறியியலாளர் (மோட்டார் இயந்திரவியல்) பட்டம் அல்லது மோட்டார் இயந்திரவியல் தொழில்நுட்பத்தை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 19 | Electrical and Electronic Studies<br>மின் மற்றும் இலத்திரனியல் கல்வி | மின் மற்றும் மின்னனுப் பொறியியல் நுட்பம் தொடர்பான பொறியியல் விஞ்ஞானமாணி பட்டம் அல்லது பொறியியல் தொழில்நுட்ப பட்டம் அல்லது பிரயோக மின்னனு விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது மின் மற்றும் இலத்திரனியல்தொழில்நுட்பத்தைபிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |

| தொடர் எண் | பாடம் | தகைமைகள் |
|---|---|---|
| 20 | Textile and Apparel Studies<br>ஜவுளி மற்றும் ஆடைக் கல்வி | வடிவமைப்பு தொடர்பான பட்டம் அல்லது ஆடைக் கைத்தொழில் மற்றும் ஜவுளி தொடர்பான பொறியியல் இளமாணி பட்டம் அல்லது தொழில்நுட்பவியல் பட்டம் அல்லது புடவைக் கைத்தொழில் மற்றும் ஆடைகள் தொடர்பான தொழில்நுட்பத்தை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 21 | Metal Fabrication Studies<br>உலோகக் கட்டுமான தொழில்நுட்பக்கல்வி | தொழில்நுட்ப பட்டம் இயந்திரவியல் (பொது) அல்லது இயந்திரவியல் தொழில்நுட்பத்தை (பொது) பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் அல்லது உலோக வடிவமைப்பு தொழில்நுட்பத்தை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 22 | Aluminium Fabrication Studies<br>அலுமினியக் கட்டுமான தொழில்நுட்பக்கல்வி | தொழில்நுட்ப பட்டம் இயந்திரவியல் (பொது) அல்லது தொழில்நுட்ப பட்டம் சிவில் (கட்டுமானம்) அல்லது அலுமினியம் கட்டுமான தொழில்நுட்பத்தை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 23 | Software Development<br>மென்பொருள் மேம்பாடு | கணினி பொறியியல் நுட்பம் தொடர்பாக பொறியியல் விஞ்ஞாமாணி பட்டம் அல்லது கணினிக் கல்வி தொடர்பாக விஞ்ஞானமணி விசேட பட்டம் அல்லது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் பற்றிய விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பட்டம் அல்லது மென்பொருள் பொறியியல் விஞ்ஞானமாணி பட்டம் அல்லது பட்டத்திற்கு பிரதான பாடமாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் அல்லது கணினிக் கல்வி உள்ளடங்கிய விஞ்ஞானமாணி பட்டம் அல்லது மென்பொருள் அபிவிருத்தி பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 24 | Web Designing<br>இணையத்தளம் வடிவமைத்தல் | கணினி பொறியியல் நுட்பம் தொடர்பான பொறியியல் விஞ்ஞானமாணி பட்டம் அல்லது கணினிக் கல்வி தொடர்பான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பட்டம் அல்லது மென்பொருள் பொறியியல் விஞ்ஞானமாணி பட்டம் அல்லது பட்டத்திற்கு பிரதான பாடமாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடம் அல்லது கணினிக் கல்வி உள்ளடங்கிய விஞ்ஞானமாணி பட்டம் அல்லது இனையத்தள வடிவமைத்தலை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |

| தொடர் எண் | பாடம் | தகைமைகள் |
|---|---|---|
| 25 | Tourism and Hospitality<br>சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் | விருந்தோம்பல் மற்றும் ஓய்வு முகாமை தொடர்பான நிர்வாகமாணி பட்டம் அல்லது விஞ்ஞானமாணி சுற்றுலா முகாமைத்துவ விசேட பட்டம் அல்லது விஞ்ஞானமாணி பராமரிப்பு சேவை முகாமை தொடர்பான விசேட பட்டம் அல்லது விருந்தோம்பல், சுற்றுலாத்துறை நிகழ்ச்சி முகாமை தொடர்பான பட்டம் அல்லது சுற்றுலா முகாமைத்துவ விசேட பட்டம் அல்லது சுற்றுலா முகாமைத்துவ பட்டம் அல்லது சுற்றுலா மற்றும் கலாசார வள முகாமைத்துவ பட்டம் அல்லது சுற்றுலா மற்றும்விருந்தோம்பலைபிரதானபாடமாகக் கொண்ட பட்டம். |
| 26 | Environmental Studies<br>சுற்றுச்சூழல் கல்வி | சுற்றுச்சூழல் முகாமைத்துவம் மற்றும் வனவிஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞான மாணி விசேட பட்டம் அல்லது சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாக விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது சுற்றுச்சூழல் பாது காப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான இளமாணி பட்டம் அல்லது சுற்றுச்சூழல் கல்வியை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |

5.2 இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பின் விதிமுறைகளுக்கு ஏற்ப சகல விண்ணப்பதாரிகளும் கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரண தர)ப்பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ்மொழி ஒருபாடமாகசித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

6. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்கும் இறுதித்திகதிக்கு 18 வயது பூர்த்தியாகி இருப்பதுடன் அன்றைய தினத்திற்கு வயது 35 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

7. **ஏனைய தேவைகள் :**

(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜைகளாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகள் சிறந்த நல்லொழுக்கம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

(iii) இவ் அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று, பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iv) சகலவிண்ணப்பதாரிகளும்இலங்கையின் எப்பாகத்திலும்சேவையாற்றக்கூடியவாறும்பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளரீதியான பொருத்தப்பாட்டையும் கொண்டிருத்தல் வேண்டும்.

8. **விண்ணப்பிக்கும் முறை :**

8.1 விண்ணப்பப்படிவம் இந்த அறிவுறுத்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப A4 அளவுடையகாகிதத்தில்இருபக்கங்களையும்பயன்படுத்திதயாரித்துவிண்ணப்பதாரியினாலேநிரப்பப்படுதல் வேண்டும். 01 தொடக்கம் 7.3 வரைக்கும் உள்ள தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும் 08 தொடக்கம் மீதமாக உள்ள தலைப்புக்கள் மற்றைய பக்கத்திலும் உள்ளடங்குவதாக தமது விண்ணப்பப்படிவத்தினை தயாரித்தல் வேண்டும் என்பதை விசேடமாக கவனத்திற்கொள்ளல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவங்களுக்கு ஏற்புடையதல்லாத விண்ணப்பப்படிவங்களும், முழுமை பெறாத தகவல்களைக் கொண்ட விண்ணப்பப் படிவங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தன்னகத்தே வைத்திருப்பது பிரயோசனம் அளிக்கும்)

8.2 ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவம் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.

8.3 விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர் /சமாதான நீதவான் /சத்தியப்பிரமாண ஆணையாளர் /சட்டத்தரணி /பிரசித்த நொத்தாரிஸ்/முப்படைகளின் அதிகாரி தரத்திலான உத்தியோகத்தர் /பொலிஸ் சேவையின் அரசிதழ்பதிவுப் பெற்ற அலுவலர் அல்லது ரூபா 2,40,360க்கும்கூடிய அடிப்படை வருடாந்தசம்பளத்தை பெறுகின்ற அரசாங்க நிரந்தர பதவியொன்றை வகிக்கின்ற உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

8.4 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கின்றார் என்ற முன்எடுகோளின் பிரகாரம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையிலான, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித்தினத்திற்கு அல்லது அத்தினத்திற்கு முன்னர் உரிய பரீட்சைக்கட்டணங்கள் செலுத்தப்பட்டு அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பிழையின்றி பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்திருக்கின்ற விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். பரீட்சை அனுமதிப்பத்திரம் வெளியிடப்பட்டதும் அது தொடர்பான பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று தினங்களுக்குப் பின்பும் தம்முடைய அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைத்தல் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கின்ற பொழுது விண்ணப்பதாரி தன்னால் கோரப்பட்ட பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாக குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரிகள் கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின் அந்த விபரங்களுடன் பெக்ஸ் மூலமாக பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை விரைவாக பெற்றுக்கொள்ளும் விதத்தில் விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதம் ஒன்றை அறிவித்தலில் கூறப்பட்ட பெக்ஸ் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும் போது, பரீட்சைத் திணைக்களத்தினால் வினவும் எந்தவொரு விடயத்தையும் உறுதிப்படுத்துவது தொடர்பாக தன்னகத்தே வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி/பரீட்சைக் கட்டணம் செலுத்துவது அவசியமானால் அதற்குரிய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலிடும்போது பெற்றுக்கொண்ட பதிவு அஞ்சல் ரசீதை தயாராக வைத்திருப்பதும் பிரயோசனமாகும்.

9. **பரீட்சைக்கு தோற்றல் :**

9.1 விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளரினால் அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி ஒருவர் பரீட்சை மண்டப பொறுப்பாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பித்து பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிக்கு பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

9.2 விண்ணப்பதாரர் ஒருவர் தமக்காக தெரிவு செய்யப்பட்டிருக்கும் பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றல் வேண்டும். பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்படும் விதிமுறைகளுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உள்ளாவார்கள். அந்த விதிமுறைகளை மீறுபவருக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அளிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாகுவதற்கு நேரிடும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குவது பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது பதவியொன்றை பெறுவதற்கு தகைமை பெற்றிருப்பதாக கருதப்படுவதில்லை என்பதுடன் பரீட்சையில் சித்தி எய்துவது நியமனம் பெறுவதற்கான தகுதியாக கருதப்பட மாட்டாது.

10. **விண்ணப்பதாரியின் அடையாளம்**.- தாம் தோற்றும் அனைத்து பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்ட பொறுப்பாளர் திருப்தி அடையும் விதத்தில் விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தினுள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக, கீழ்காணும் ஒரு அடையாள ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

(i) ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11. **பொய்யான தகவல்களை வழங்குவது தொடர்பான தண்டனை**.- விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனத்துடன் உண்மையான தகவல்களை வழங்க வேண்டும். இந்தப் பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப

விண்ணப்பதாரர் ஒருவர் தகைமையற்றவராக தெரியவரும்பட்சத்தில் பரீட்சைக்கு முன்னதாகவோ அல்லது பரீட்சை நடைபெறும் காலத்திலோ அல்லது பரீட்சையின் பின்போ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலுமோ அவரின் அபேட்சகத்தன்மையை இரத்துச்செய்ய இடமுண்டு.

12. **பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழி** :

12.1 இந்த பரீட்சை சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலங்களில் கொழும்பில் நடாத்தப்படும்.

12.2 எழுத்துப் பரீட்சையில் சித்திபெறுவதற்காக ஒரு பாடத்திற்கு குறைந்தபட்சமாக 40 புள்ளிகள் வீதம் பெற்று இரண்டு பாடங்களிலும் சித்திபெறுதல் வேண்டும்.

12.3 அனைத்து விண்ணப்பதாரரும் இந்தப் பரீட்சையின் சகல வினாக்களுக்கும் தோற்றவேண்டியது ஒரு மொழியில் மாத்திரமே. அந்த மொழியானது தமது நியமனத்தை பெறுவதற்கு உரிய மொழியாகவே இருத்தல் வேண்டும்.

12.4 விண்ணப்பதாரர் ஒருவருக்கு தமது விண்ணப்பப்படிவத்தில் காணப்படும் மொழியை பின்பு மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

13. **பாடத் திட்டம்**.- இந்தப் பரீட்சை கீழ்வரும் 13.1 மற்றும் 13.2 ஆகிய வினாப்பத்திரங்கள் இரண்டைக் கொண்டுள்ளது. சகல விண்ணப்பதாரிகளும் அந்த இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுவது கட்டாயமாகும்.

13.1 ***நுண்ணறிவுப் பரீட்சை***- காலம் 01 மணி நேரம் (100 புள்ளிகள்)

ஆசிரியர் தொழிலுக்கான விண்ணப்பதாரியிடம் இருக்கவேண்டிய திறன் தர்க்கரீதியதான நுண்ணறிவு தொடர்பான ஆற்றலினை அளவீடு செய்யும் நோக்கத்தில் இவ் வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். இதில் பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளிப்பதற்காக 50 வினாக்கள் உள்ளடங்கும். அந்த வினாக்கள் அனைத்துக்கும் விடையளிப்பது அவசியமாகும்.

13.2 ***பொது அறிவு***- காலம் 01 மணி நேரம் (100 புள்ளிகள்)

ஆசிரியர் துறைக்கேற்ப அத்துறை தொடர்பாக இருக்கும் பொது அறிவு மற்றும்/அல்லது தேசிய மட்டத்தில் இடம்பெற்ற மற்றும் இடம்பெறுகின்ற கல்விப் போக்குகள் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி நவீனமயப்படுத்தல் தொடர்பான பொது அறிவை பரீட்சித்துப் பார்க்கும் பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளிப்பதற்காக 50 வினாக்கள் உள்ளடங்கும். அந்த வினாக்கள் அனைத்துக்கும் விடையளிப்பது அவசியமாகும்.

13.3 ***பொது நேர்முகப் பரீட்சை***- பொது நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது

**குறிப்பு**.- நிறைவேற்றுவதற்கு எதிர்ப்பார்க்கும் இலக்கு

சேவைப் பிரமாணக்குறிப்பு மற்றும் அதற்கு இணைவாக வெளியிடப்படும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளனவா என்பதை பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் உடல் தகுதிகளை பரீட்சித்துப் பார்த்தல்.

13.4 ***செயன்முறைப் பரீட்சை***- செயன்முறைப் பரீட்சைக்காக விண்ணப்பதாரரினால் இனங்காணப்பட்ட தலைப்பொன்றின் கீழ் முன்வைப்பு செய்யப்பட வேண்டும். அதற்காக 05 நிமிடத்திற்கு குறையாத நேரம் வழங்கப்படும். இதற்கான புள்ளிகள் கீழ்க்கண்டவாறு அமையும்.

| தொடர் இலக்கம் | செயன்முறைப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கும் அளவுத்திட்டம் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கு தேவையான குறைந்த பட்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | குறிக்கோள் மற்றும் நுழைவு | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் முகாமை | 05 | 02 |
| 03 | தொடர்பாடலின் தெளிவுத்தன்மை | 05 | 02 |
| 04 | நேர முகாமை | 05 | 02 |
| 05 | முன்வைக்கும் நுட்பங்களை கையாளுதல் | 05 | 02 |
| | மொத்த புள்ளித் தொகை | 25 | 10 |

**குறிப்பு**.- நிறைவேற்றுவதற்கு எதிர்ப்பார்க்கப்படும் இலக்குகள்

ஆசிரியத் தொழிலில் முக்கியமான கற்றல் கற்பித்தல் செயற்பாடு தொடர்பாக விண்ணப்பதாரருக்குரிய திறமையை மதிப்பீடு செய்தல்

14. **பரீட்சைக் கட்டணம் :**

14.1 பரீட்சைக்கட்டணம் 600 ரூபா ஆகும். வருவாய்த்தலைப்பு இலக்கம் 2003-02-13 இன் கீழ் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் பெயரில் எந்தவொரு தபால்/உபதபால் நிலையத்திலும் பணம் செலுத்தி விண்ணப்பதாரர் பெயரில் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய நிரலில் ஒட்டி அந்த பற்றுச்சீட்டு இலக்கத்தைக் குறிப்பிடவும். (ரசீதின் நிழற்படப் பிரதியொன்றை தன்னகத்தே வைத்திருப்பது பிரயோசனமளிக்கும்.) இந்த பரீட்சைக் கட்டணங்களுக்கு மேலாக எந்தவொரு அறவிடுதலும் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். பரீட்சைக்கட்டணமாக காசுக்கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்காக செலுத்திய கட்டணப் பணத்தை எந்தவொரு காரணத்தைக் கொண்டும் மீள செலுத்துவதோ அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றம் செய்வதோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

15. **பரீட்சைப் பெறுபேறுகள்:**

15.1 எழுத்துமூலப்பரீட்சையின் மொத்தபுள்ளிகளின் எண்ணிக்கையின் முதன்மை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேறு அட்டவணையை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் பிரத்தியேகமாக பெறுபேறுகளை தெரியப்படுத்துவது அல்லது www.results.exam.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

16. **விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்வதற்குரிய அறிவுறுத்தல்கள்**.- விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும்போது பின்வரும் அட்டவணை 1 மற்றும் 2 ஐ மாத்திரம் பயன்படுத்தவும்.

**அட்டவணை 01**

| மொழி | குறியீட்டு எண் |
|---|---|
| சிங்களம் | 2 |
| தமிழ் | 3 |

**அட்டவணை 02**

| பாட எண் | பாடம் | சிங்கள மொழி | தமிழ் மொழி |
|---|---|---|---|
| 1 | குழந்தை உளவியல் மற்றும் பராமரிப்பு | √ | √ |
| 2 | சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு | √ | √ |
| 3 | உடற்கல்வி மற்றும் விளையாட்டு | √ | √ |
| 4 | அரங்கற் கலை | √ | √ |
| 5 | நிகழ்ச்சி முகாமை | √ | √ |
| 6 | கலை மற்றும் கைவினை | √ | √ |
| 7 | உள்ளக வடிவமைப்பு | √ | √ |
| 8 | நவநாகரிக வடிவமைப்பு | √ | √ |
| 9 | வரைபடம் வடிவமைப்பு | √ | √ |
| 10 | கலை மற்றும் வடிவமைப்பு | √ | √ |
| 11 | நிலத்தோற்ற வடிவமைப்பு | √ | √ |

**அட்டவணை 02**

| பாட எண் | பாடம் | சிங்கள மொழி | தமிழ் மொழி |
|---|---|---|---|
| 12 | பிரயோக தோட்டக் கலை கற்கை | √ | √ |
| 13 | கால்நடை உற்பத்தி தொழில்நுட்பக் கல்வி | √ | √ |
| 14 | உணவு பதப்படுத்தும் கல்வி | √ | √ |
| 15 | நீர்வாழ் வள தொழில்நுட்பக் கல்வி | √ | √ |
| 16 | தோட்ட பயிர்ச்செய்கை உற்பத்தி தொழில்நுட்பக் கல்வி | √ | √ |
| 17 | நிர்மாணக் கல்வி | √ | √ |
| 18 | மோட்டார் இயந்திரக் கல்வி | √ | √ |
| 19 | மின் மற்றும் இலத்திரனியல் கல்வி | √ | √ |
| 20 | ஜவுளி மற்றும் ஆடைக் கல்வி | √ | √ |
| 21 | உலோக கட்டுமான தொழில்நுட்பக் கல்வி | √ | √ |
| 22 | அலுமினியக் கட்டுமான தொழில்நுட்பக் கல்வி | √ | √ |
| 23 | மென்பொருள் மேம்பாடு | √ | √ |
| 24 | இணையத்தளம் வடிவமைத்தல் | √ | √ |
| 25 | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் | √ | √ |
| 26 | சுற்றுச்சூழல் கல்வி | √ | √ |

17. தற்போது அரச சேவையில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 12 என்ற தலைப்பின் கீழ் தமது திணைக்களத்தின் தலைவர் ஊடாக உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

18. நேர்முகப் பரீட்சைக்காக குறிப்பிட்ட தினத்தில் சமுகமளிக்காத விண்ணப்பதாரர்களைப் பற்றி எவ்விதத்திலும் மீள்பரிசீலனை செய்யப்படமாட்டாது.

19. அத்துடன் நேர்முகப் பரீட்சையன்று சகல சான்றிதழ்களையும் சமர்ப்பிக்க வேண்டியதுடன் பின்னர் சமர்ப்பிக்கும் எந்தவொரு சான்றிதழ்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

20. இந்த அறிவிப்பை தழுவாத எந்தவொரு விடயமாக இருப்பினும் அது குறித்து தீர்மானிக்கும் உரிமையும் எந்தவொரு வெற்றிடங்களின் பகுதியொன்றோ அல்லது முழுமையாகவோ பூர்த்திசெய்வது அல்லது பூர்த்திசெய்யாமல் இருப்பது அல்லது அது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளரை சார்ந்ததாகும்.

21. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடும் இந்த அறிவித்தலின் மொழிநடையில் பொருத்தமற்ற நிலை காணப்படுமெனில் சிங்கள மொழி அறிவிப்பு சரியானது என எண்ணி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சுனில் ஹெட்டியாரச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பெலவத்த, பத்தரமுல்ல
2017, நவெம்பர் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

அலுவலக தேவைக்காக

**கல்வி அமைச்சு**

நாடு பூராகவுமுள்ள தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் பதின்மூன்று ஆண்டுகள் உறுதிப்படுத்தப்பட்ட கல்வி செயற்திட்டங்களின் கீழ் தொழில்சார் பாடத்திற்கான சிங்கள மற்றும் தமிழ் மொழி ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை 3-1(அ) தரத்திற்கு பட்டதாரிகளை சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டி பரீட்சை – 2017

1. கோரப்படும் மொழி மூலத்திற்கான அட்டவணை 1ஐ உபயோகித்து உரிய குறியீட்டு இலக்கத்தை கட்டத்தினுள் எழுதவும் -

   மொழி மூலம் : ☐

2. கோரப்படும் பாடங்களுக்கான பாட குறியீட்டு இலக்கத்தின் படி ஆகக்கூடிய பாடங்கள் மூன்றை பெயரிடவும்

   (அட்டவணை 2 ஐ உபயோகிக்கவும்)

| | பாடம் | பாடக் குறியீட்டு எண் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

3.

   3.1 முழுப்பெயர் (ஆங்கல பெரிய எழுத்துக்களில்) (உ-ம்: AMARAKOON MUDIYANSELAGE NAMAL HERATH)

   ……………………………………………………………………………………………

   3.2 இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்தை இறுதியாகவும் குறிப்பிடுக (உ.ம்.: HERATH A.M.N.)

   ……………………………………………………………………………………………

   3.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்)

   ……………………………………………………………………………………………

4. தற்போதுள்ள முகவரி :(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)(அனுமதிப்பத்திரம் இந்த முகவரிக்கு தபாலிடப்படும்)
……………………………………………………………………………………………

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

6. பால் : பெண் - 1 ☐
   ஆண் - 0

   (உரிய இலக்கத்தை கட்டத்தினுள் எழுதவும்)

7.

   7.1 விவாக நிலை : விவாகமாகாதவர் - 1 விவாகமானவர் - 2 ☐

   7.2 பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

   7.3 2017.12.11 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

8. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள்:

| க.பொ.த. (சா.தர) பரீட்சை | | | | க.பொ.த. (உ.தர) பரீட்சை | |
|---|---|---|---|---|---|
| வருடம் :- | | பரீட்சை எண் : | | வருடம் :- | பரீட்சை எண் : |
| பாடம் | தரம் | பாடம் | தரம் | பாடம் | தரம் |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

9. உயர் கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள்:

9.1 பட்டம் :-
9.2 வழங்கிய பல்கலைக்கழகம் :
9.3 பட்டம் செல்லுபடியாகும் திகதி:
9.4 பட்டத்திற்காக கற்ற பிரதான பாடம்/பாடங்கள்:
9.5 பட்டம் பெற்றுள்ள மொழிமூலம்:

10. பரீட்சைக் கட்டணம் செலுத்திய விபரங்கள்:

10.1 செலுத்திய பரீட்சைக் கட்டணம் ரூபாய் (எழுத்தில்):
10.2 பற்றுச்சீட்டு எண்:
10.3 வழங்கிய தபால்/உப தபால் நிலையம்:
10.4 திகதி:

| |
|---|
| கட்டணம் செலுத்திய ரசீதின் பிரதியொன்றை உங்கள் வசம் வைத்துக்கொள்ளவும். |
| கட்டணம் செலுத்திய ரசீதை கழறாதபடி அதன் ஒரு விளிம்பை இங்கே ஒட்டவும். |

இங்கு குறிப்பிட்டுள்ள விடயங்கள் என்னுடைய அறிவு மற்றும் நம்பிக்கையின் படி உண்மையென தெரிவிக்கின்றேன். என்னை இந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்பு இத் தகவல்கள் உண்மையற்றவை என வெளிப்படின் நான் சேவையில் இருந்து விலக்கப்படுவேன் என்பதை அறிவேன். மேலும் பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் உட்படுவேன் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி : ........................................

11. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இந்தவிண்ணப்பத்தைசமர்ப்பிக்கும்திரு./திருமதி/செல்வி............................................அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் என் முன்னிலையில் .....................ஆம் திகதியன்று அவரின் கையொப்பத்தை இட்டார் என்பதையும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதையும் அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம் :-----.
உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :-
பதவி :-
முகவரி :-
திகதி :-..................... ..........……….

12. விண்ணப்பதாரர் அரச உத்தியோகத்தராக இருப்பின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்:

திரு./ திருமதி/ செல்வி ......................................... அவர்களின் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்றேன். அவர் இந்த அமைச்சில்/திணைக்களத்தில் நிரந்தர/தற்காலிக/சாதாரண அலுவலராக பணியாற்றுகிறார் என்பதையும், இந்தப் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாதென்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

..........................................................,
திணைக்களத் தலைவர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :-
பதவி :-
அமைச்சு/திணைக்களம்:-
(பதவி முத்திரையால் உறுதிப்படுத்தவும்)

11-524

---

## தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிப் பயிற்சிக்காக விஞ்ஞானவியல் தாதி பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2017

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் தாதியர் சேவையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கற்கை நெறிக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய பல்கலைக்கழகத்தினூடு விஞ்ஞானவியல் தாதியர் பட்டம் பெற்ற கீழே குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரிகளினது பட்டம் வலுப்பெற்ற தினம் மற்றும் GPA பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட திறமைப் பட்டியலின் பிரகாரம் மற்றும் நிலவுகின்ற வெற்றிடங்களின் பிரகாரம் ஆண்டு தோறும் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படும் எண்ணிக்கையில் 25□ இனை விஞ்ஞானவியல் தாதியர் பட்டதாரிகளை விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளில் இருந்து தெரிவுசெய்யப்படுவர்.

2. **பதவிக்கான கல்வித் தகைமைகள்.-** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய பல்கலைக்கழகத்தினூடு விஞ்ஞானவியல் தாதியர் பட்டத்தை (Bsc. Nursing) பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. **உடற்தகைமை மற்றும் ஏனைய தகைமைகள் :**

(அ) இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு எல்லாவிதத்திலும் உடல் ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) பதவிக்குரிய கடமைகளைச் செய்வதற்குப் போதியளவு உடல் ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(இ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) விண்ணப்பதாரி சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(உ) ஆண்/ பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும் ;

(ஊ) 2017.11.24 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(எ) பட்டம் வலுப்பெற்ற தினம் 2017.11.24 ஆந் திகதிக்கு முற்பட்ட திகதியாக இருத்தல் வேண்டும்.

4. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பங்களைத் தயாரித்தல் வேண்டும். அதற்காக A4 அளவுத் தாளினைப் பயன்படுத்தல் வேண்டும். விண்ணப்பத்தில் இலக்கம் 1 தொடக்கம் 12 வரை முதல் பக்கத்திலும், 13 தொடக்கம் 15 வரை இரண்டாம் பக்கத்திலும், 16 ஐ மூன்றாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரித்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பதாரிகள் 300 ரூபா தொகையை இலங்கை வங்கி, தப்ரபேன் கிளை, இல. 7041318, சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம்-பரீட்சைக் கட்டணம் அறவிடல் எனும் கணக்கிற்கு வரவு வைத்து பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டினுள் கழராதவாறு ஒட்ட வேண்டும். அக்கட்டணம் எக்காரணம் கொண்டும் மீண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது என்பதுடன், பிற பரீட்சைகளுக்காக மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது ;

(இ) இலங்கை நிர்வாக சேவையின் உத்தியோகத்தர் ஒருவர்/ கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர் ஒருவர்/ அரச கணக்காளர் சேவையின் உத்தியோகத்தர் ஒருவர்/ அரச பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சட்ட வழக்கறிஞர்/ பிரசித்த நொத்தாரிசு/ வருட சம்பளம் 2,40,360 ரூபாவிற்குக்

குறையாத வேதனம் பெறும் ஓய்வூதிய சம்பளத்துடன் கூடிய அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் ;

(ஈ) முறையாகப் பூர்த்திசெய்த விண்ணப்பத்தைக் கடித உறையில் இட்டு அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூளையில் "தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிப்பயிற்சிக்காக விஞ்ஞானவியல் தாதி பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2017" எனவும், உரிய பட்டம் மற்றும் கல்வி ஆண்டு என்பவற்றையும் குறிப்பிட்டு, "பணிப்பாளர், நிர்வாகம் 1, சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, "சுவசிறிபாய", இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு 2017.11.24 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

**குறிப்பு**.- மேற்படி (2) மற்றும் (3) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் ஏனைய சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியான 2017.11.24 ஆந் திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5. அரச அல்லது அரச சார்பான நிறுவனங்களில் சேவை செய்பவர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்ப வேண்டும். அத்துடன் இது வெளிவாரியான ஆட்சேர்ப்பு என்பதுடன், உரிய பயிற்சியைச் சிறப்பாக நிறைவு செய்தால் அல்லது செய்யாதவிடத்து எக்காரணத்தைக் கொண்டும் தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் செல்ல முடியாது.

6. இப்பொதுச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு அமையாத, பூரணப்படுத்தப்படாத மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் அமையாத விண்ணப்பங்கள், வங்கி பற்றுச்சீட்டு ஒட்டப்படாத மற்றும் 2017.11.24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுசெய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது.

7. மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுள் பட்டம் வலுப்பெற்ற தினம் மற்றும் GPA பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட திறமைப் பட்டியலின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்டவர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் பொதுவான நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படுவதுடன், நேர்முகப் பரீட்சை சபையினால் தாதியர் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பரிசீலித்தல் மற்றும் உடற்தகைமை என்பன பரிசீலிக்கப்படும்.

**குறிப்பு** :

(அ) சேவை அவசியத்தின் பிரகாரம் பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளும் தொகை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுபவர்களின் தொகை என்பன சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

(ஆ) நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும் சகலரையும் பயிற்சிக்கு இணைத்துக்கொள்வதற்காக இச்சுற்ற றிக்கையில் எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்பதை கவனத்திற்கொள்ளவும்.

(இ) நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகைமையுடையோர், தகைமையற்றோர் மற்றும் தெரிவுசெய்யப்பட்டவர்கள் பற்றிய விபரங்கள் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன், எவருக்கும் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்பட மாட்டாது.

8. நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரிகளால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப்பிரதிகள் மற்றும் தம்மால் சான்றுறுதி செய்யப்பட்ட பிரதிகள் என்பவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) பட்டத்தின் மூலப்பிரதி மற்றும் GPA பெறுமதியைக் காட்டும் சான்றிதழ் (இச்சான்றிதழ்களின் உறுதிப் படுத்திய பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும்.) ;

(இ) தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடி யாகும் கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம்.

9. **பயிற்சி வழங்கும் முறை** :

| பயிற்சிநெறி | அக்கற்கைநெறிக்கான கால எல்லை | மொழி |
|---|---|---|
| தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு | 6 மாதங்கள் | ஆங்கிலம் |

(அ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் உரிய தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிக்கு அந்தந்த பயிற்சிப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுவர். கற்கை நெறிகள் ஆங்கில மொழியில் இடம்பெறும்.

(ஆ) பயிற்சிப் பாடசாலைகளுக்கு உள்வாங்கப்படுகின்ற பயிலுனர்கள் பயிற்சிப் பாடசாலைகளில் வலுவில் இருக்கும் விதிமுறைகளுக்குக் கட்டுப்படல் வேண்டும். அவ்விதிமுறைகள் மற்றும் அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

(இ) பயிற்சிக் காலத்தின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலையும் நடத்தையும் திருப்திகரமாக இல்லாவிட்டால் அல்லது தான் உள்வாங்கப்படும் பயிற்சிப் பாடசாலைகளில் வலுவில் இருக்கும் விதிமுறைகளுக்குக் கட்டுப்படத் தவறும் பயிலுநர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்டஈடுகளும் இன்றி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

(ஈ) பயிற்சிக் காலத்தில் அரச நிருவாக சுற்றறிக்கை 03/ 2016 இன் நியதிகளுக்கு அமைய மாணவ தாதியர்களுக்கு இரண்டாம் வருடத்தில் வழங்கப் படுகின்ற மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும்.

(உ) தாதியர் பயிற்சிப் பாடசாலைக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும்போது பயிற்சியைச் சிறப்பாக நிறைவுசெய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்தப் பயிற்சியை முழுமையாக நிறைவுசெய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்தபட்சம் ஐந்து வருடங்கள் (5) மாகாணத்தில் அல்லது மத்திய அரசின் கீழுள்ள வைத்தியசாலைகள் அல்லது சுகாதார சேவைகள் திணைக்களத்தில் சேவையாற்றுவதாகவும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தத்திற்கும், பிணைக்கும் உடன்படல் வேண்டும். பயிற்சியின்போது பயிற்சியிலிருந்து விலகினால் அல்லது பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால், மேற்படி (இ) பந்தியின் பிரகாரம் பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று ஐந்து (5) வருடங்கள் சுகாதார சேவைகள் திணைக்களத்தின்கீழ் உரிய பதவியில் சேவையாற்றத் தவறினால் அல்லது பயிற்சிக் காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் பயிற்சிக்காக செலவிடப்பட்ட செலவுகள் மற்றும் பிணை அவரினால் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **சேவையில் ஈடுபடும் நியதிகள்.**- பயிற்சியின் இறுதியில் குறித்த பதவியில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு/வழங்காமல் இருப்பதற்குத் தீர்மானித்தலானது அச்சந்தர்ப்பத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கேற்ப ஆகும். அதன் பிரகாரம் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு தீர்மானித்தால் பயிலுநர்கள் தாம் பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட கற்கைநெறிக்கு உரித்தான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் வெற்றிடங்களின் பிரகாரம் 2017.11.24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/ 2016 இன் அட்டவணை I இன் MT-7-2016 சம்பளப் படிமுறைக்கு உரித்தான III ஆம் தரத்தின் பதவி நிலை தாதியர் பதவிகளுக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பதவிக்கு நியமிக்கப்பட்டால் பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/ 2016 இன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

11. விண்ணப்பத்தை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விபரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்கவும். பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளும் போதும் நியமனம் பெற்ற பின்பும் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என நிருபணமாகினால், சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்துச் செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு கறுப்புப்பட்டியலில் அவருடைய பெயர் சேர்க்கப்படுவதுடன், பயிற்சிக் காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவினங்கள் மற்றும் ஒப்பந்தப் பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் உரிய கற்கை நெறியைத் தொடர்வதற்கு மற்றும் நாட்டின் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கு உடல் மற்றும் உள ரீதியாக ஆரோக்கியமானவர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு பயிற்சியின் முதலாம் மாதத்தினுள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், மருத்துவப் பரிசோதனையில் ஆரோக்கியமற்றவர் எனக் காணப்பட்டால் விண்ணப்பதாரி பயிற்சியில் ஈடுபடுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவர்.

13. இப்பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தனியார் சேவையில் ஈடுபடுதல் தொடர்பாக உரிமைகள் ஏதும் இல்லை. அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகத் தெரியவரின் பயிற்சியில் இருந்து நீக்கப்படுவார் அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

14. மேற்படி இணைத்துக்கொள்ளப்படும் சகல உத்தியோகத்தர்களும் உரித்தாகும் சகல நியதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை விதிமுறைகள், சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் விதிக்கப்படும் கொள்கைத் தீர்மானங்கள், அரச சேவை ஆணைக்குழுவினால் அரச சேவைகள் தொடர்பாக விதிக்கப்படும் விதிமுறைகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கும், தாதியர் சேவை பிரமாணக் குறிப்பின் நியதிகளுக்கும், அரச நிதிப் பிரமாணத்திற்கும், அரசினால் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் மற்றும் அவற்றில் காலத்திற்குக்காலம் ஏற்படுத்தக்கூடிய திருத்தங்கள் என்பவற்றுக்குக் கட்டுப்படல் வேண்டும்.

15. பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்படுபவர்களுக்கு பயிற்சிப் பாடசாலைகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இவ்வமைச்சு கட்டுப்படவில்லை. அவ்வாறு வழங்குவதாயின், அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட வீடு அல்லது அறை வாடகை, தண்ணீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் அறவிடப்படும்.

16. பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளல் தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள்

தோன்றினால் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து, சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

ஜனக சுகததாச,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
'சுவசிறிபாய', இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிப் பயிற்சிக்காக விஞ்ஞானவியல் தாதி பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2017**

விண்ணபத்தைப் பூர்த்திசெய்யமுன் பொது சுற்றறிக்கையை நன்றாக வாசிக்கவும்.

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

   (ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

   (இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

3. அஞ்சல் முகவரி :----.

4. நிந்தர முகவரி :----.

5. தொலைபேசி இலக்கம் :----.

6. (அ) வதிவிட மாவட்டம் :----.

   (ஆ) நீங்கள் இம்மாவட்டத்தின் நிரந்தர வசிப்பாளரா ? :----.

7. (அ) பிறந்த திகதி :
   ஆண்டு : ---- மாதம் : ---- திகதி : ----

   (ஆ) 2017.11.24 ஆந் திகதியன்று வயது :
   வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----

8. பால் :
   ஆண் ☐ பெண் ☐

   (உரிய பெட்டியில் X அடையாளம் இடவும்)

9. நீங்கள் இலங்கைப் பிரசையா ?

   ஆம் ☐ இல்லை ☐

   (உரிய பெட்டியில் X அடையாளம் இடவும்)

10. திருமணமானவரா ?

   ஆம் ☐ இல்லை ☐

   (உரிய பெட்டியில் X அடையாளம் இடவும்)

11. உயரம் :
   அடி .......................... அங்குலம் ............................

12. கல்வித் தகைமை :

| சித்தி யடைந்த பட்டம் | பட்டம் பெற்ற திகதி | தரத்தின் பொது பெறுமதி (GPA) | பல்கலைக் கழகம் | கல்வி ஆண்டு |
|---|---|---|---|---|
| | | | | |

13. ஏதாவது குற்றச் செயலுக்காக நீதிமன்றத் தண்டனை அனுபவித்துள்ளீரா ?

   ஆம் : ☐ இல்லை : ☐

   (உரிய பெட்டியில் X அடையாளம் இடவும்)

   ஆமெனில், தயவுசெய்து காரணத்தைக் குறிப்பிடுக :----.

14. **விண்ணப்பதாரியின் உறுதிமொழி :**
   நான் இப்பொது சுற்றறிக்கையை நன்றாக வாசித்து விளக்கம் பெற்று அதில் குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு இவ்விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தேன் எனவும், நான் வேறு எந்தக் கற்கைநெறிகளையும் தொடரவில்லை எனவும், இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல விபரங்களும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன்.

   எனது இந்த உறுதிமொழியில் அல்லது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது பிழை அல்லது தவறு என நிரூபணமாகினால், பயிற்சியின்போது

எனின், நான் பயிற்சிக்குத் தகுதியற்றவர் எனவும், நியமனம் கிடைத்த பின்னர் எனின் பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

அவ்வாறே இவ்வாட்சேர்ப்பு வெளிவாரியான ஆட்சேர்ப்பு எனவும், உரிய பயிற்சியைச் சிறப்பாக நிறைவுசெய்தால் அல்லது செய்யாதவிடத்து எக்காரணத்தைக் கொண்டும் தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் செல்ல முடியாது என்பதையும் நான் நன்கறிவேன்.

| |
|---|
| பற்றுச்சீட்டைக் கழராத விதத்தில் இங்கு ஒட்டவும். |

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

15. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................ அவர்கள் எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் ............................. ஆந் திகதி இட்டார் எனவும் உறுதிப் படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
(பதவி முத்திரையுடன்).

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

16. **விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி அரச சேவையில்/ மாகாண அரச சேவையில் உள்ளவராயின் திணைக்களத் தலைவரின் உறுதிமொழி :**

மேற்படி விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி .................................................... என்பவர் இத்திணைக்களத்தில் ....................................... பதவி வகிக்கின்றார் என உறுதிப்படுத்துகின்றேன்.
விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துவதுடன், இவர் இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும்/முடியாது என அறியத்தருகின்றேன்.

அத்துடன் இது வெளிவாரியான ஆட்சேர்ப்பு எனவும், உரிய பயிற்சியைச் சிறப்பாக நிறைவுசெய்தால் அல்லது செய்யாதவிடத்து எக்காரணத்தைக் கொண்டும் தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் செல்ல முடியாது என்பது தெளிவுபடுத்தப்பட்டது எனவும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரையுடன்).

திணைக்களத் தலைவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

*10-566*

---

## அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் சேவையில் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2013 (I) (2017)

2013.12.11 ஆந் திகதிய 1840/ 34 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பின் பந்தி 8, பந்தி 15 இனது ஏற்பாடுகள், இடைக்கால ஏற்பாடுகள் மற்றும் இணைப்பு 5 இலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2018, பெப்புருவரி மாதம் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இச்சேவைப் பிரமாணக் குறிப்பு வலுப்பெறுவதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் II இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையினைப் பூர்த்திசெய்திராத ஆனால் (1) அலுவலக முறைமையும் நடைமுறைகளும், (2) அரசாங்க அலுவலகங்களில் பாவிக்கப்படும் கணக்கீட்டு முறைமைகள் என பெயர் குறிப்பிடப்படும் இப்பரீட்சையின் இரண்டு பாடங்களையுமோ அல்லது அவற்றில் ஒன்றையோ சித்தியெய்தி அல்லது விலக்களிப்புப் பெற்றுள்ள அலுவலர்கள் பாடத்துக்குப் பாட அடிப்படையில் இச்சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் II இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் உரிய பாடங்களிலிருந்து பாடத்தின் பாடத்துக்கு விலக்களிப்புப் பெறல் வேண்டும்.

(ii) இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் அமுலாக்கத் திகதிக்கு முன்னர் தரம் II இற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ள அலுவலர்கள் பதவியுயர்வு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஆறு (6) வருடங்கள் கடப்பதற்கு முன்னர் தரம் II இற்கு உரிய வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

3. அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்காக இப்பரீட்சை

கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். அந்நகரங்களுக்கு ஏற்புடையதான நகர இலக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. போதிய அளவிலான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காது இருப்பின் அல்லது வேறு ஏதேனும் காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்துச்செய்து பரீட்சார்த்திகளின் இரண்டாவது விருப்புப்படி அந்நிலையத்தைத் தீர்மானிக்கும் தற்றுணிபு பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சார்ந்திருக்கும். விண்ணப்பப்படிவத்தின் உரிய தலைப்பினை, இங்கு காட்டப்பட்டுள்ள நகர மற்றும் நகர இலக்கங்கள் குறிப்பிட்டுள்ள அட்டவணைக்கேற்ப பூர்த்திசெய்தல் வேண்டும். விண்ணப்பம் செய்துள்ள நகரம்/ நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது :-

| *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 05 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| குருநாகல் | 18 |
| அனுராதபுரம் | 19 |
| பதுளை | 21 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

4. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்தப்படுதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக கடமைப்பட்டவராவர்.

(ii) பரீட்சார்த்திகளின் பொருட்டு விதித்துரைக்கப்பட்ட இவ் ஒழுங்குவிதிகள் வர்த்தமானி அறிவித்தலில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்வொழுங்கு விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

5. **தகைமைகள்**.- அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் தரம் II இன் நியமனமொன்றைப் பெற்றுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெறுவர். தரம் II இற்கான பதவியுயர்வுத் திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள் இப்பரீட்சையில் சித்தியெய்த வேண்டும்.

**குறிப்பு**.- இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு சமமாக மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் உரிய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினாலும் மற்றைய நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் அவ்வவ் நிறுவனங்களினால் வெளியிடப்படும். "ஒவ்வொரு மாகாண அரச சேவை மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென பின்வரும் குறியீட்டு இலக்கங்கள் பாவிக்கப்பட வேண்டும். உரிய சேவை அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும்போது விண்ணப்பத் தலைப்பில் இவ்விலக்கங்கள் பதியப்படல் வேண்டும். இணைந்த சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் 10 ஆகும்". இவ்விலக்கத்தை விண்ணப்பப்படிவத்தின் வலது பக்க மேல் மூலையில் உங்களுக்குரிய சேவை எனும் இடத்தில் குறிப்பிடவும்.

5. அட்டவணை இல. 01 - மாகாண குறியீட்டு இலக்கம் கீழ்க்குறிப்பிட்டவாறு அமையும் :

| *மாகாணம்* | *குறியீட்டு இலக்கம்* |
|---|---|
| மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | 01 |
| மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | 02 |
| தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | 03 |
| வட மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | 04 |
| கிழக்கு மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | 05 |
| வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | 06 |
| வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | 07 |
| ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | 08 |
| சப்ரகமுவ மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | 09 |

6. விண்ணப்பம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவ உருவில் அமைதல் வேண்டும். அம்மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும் என்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2017, திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

7. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை

நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். அதற்காக பின்வரும் ஆளடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆளடையாள ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

8. **விண்ணப்பங்கள்**.- (i) மாதிரி விண்ணப்பப்படிவத்தில் இலக்கங்கள் 01 தொடக்கம் 05 வரை முதற் பக்கத்திலும் ஏனையவை அடுத்த பக்கத்திலும் தோன்றும் விதத்தில் "ஏ4" அளவினதான ஒரு தாளில் விண்ணப்பத்தைத் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் தயாரித்துக் கொள்ளப்பட முடியும். ஆனால் அதை விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்திலேயே சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவமானது பின்னிணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தினையே ஒத்ததாக இருத்தல் வேண்டும் என்பதுடன். ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி அனுப்பலாகாது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத மற்றும் முறையாக முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். தன்னால் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவமானது பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாகவும் சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டதாகவும் விண்ணப்பப்படிவம் சரியாகப் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதா எனவும், குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா எனவும் விண்ணப்பதாரியினால் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்கள் இரண்டிலும் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காணப்படும் பரீட்சைத் தலைப்பினை அதேபோல ஆங்கில மொழியிலும் தயவுசெய்து குறிப்பிடவும். மேலும், விண்ணப்பதாரி பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியினைத் தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாகும்.

தவறான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை.- விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்திசெய்யும்போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி தகைமை இரத்துச்செய்ய முடியும்.

(ii) முதன்முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதன் பின்னரான அமர்வுகளின்போது அலுவலர்கள் ஒரே அமர்வில் முழுப் பரீட்சைக்குத் தோற்றுவதானால் ரூபா 500 உம், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா 250 உம் பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைத்தல் வேண்டுமென்பதுடன் நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல்/ உப அஞ்சல் அலுவலகத்திலும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டிவிடுதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக எதுவித கட்டணங்களும் அறவிடப்பட மாட்டாது என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச்செலுத்தப்பட மாட்டாது. இப்பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணத்தை வேறேதேனும் ஒரு பரீட்சைக்காக மாற்றவும் முடியாது. பரீட்சைக் கட்டணமாக முத்திரை மற்றும் காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள் ளார்கள் எனும் அநுமானத்திற்கு ஏற்ப அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தனைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்திய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான நேரசூசியின் பிரதியும் அனுமதி அட்டையும் அனுப்பிவைக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன், அது தொடர்பான அறிவிப்பொன்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பத்திரிகைகளில் வெளியிடும். அறிவிப்பு வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் இருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருந்தால் உரிய பற்றுச்சீட்டு, உங்களின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை மற்றும் பரீட்சையின் பெயரையும் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கொழும்புக்குப் புறம்பான பிரதேசமெனின் உங்களின் மேற்குறிப்பிட்ட விபரங்கள் மற்றும் பரீட்சை விண்ணப்பத்தின் பிரதியையும் தொலைநகல் மூலம் உங்களுக்கு அனுப்ப ஏதுவாக உங்களின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டுள்ள கோரிக்கைக் கடிதமொன்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு தொலைநகல் மூலம் அனுப்பி விசாரிப்பது அதிக பயனுள்ளதாகும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர் அவர்களின் கையொப்பம் உறுதிப்படுத்திய அனுமதி அட்டையைப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது அவர் பரீட்சைக்குத்

தோற்றுவதற்கும் பதவிக்குரிய தகுதியினைக் கொண்டுள்ளார் எனக் கருதலாகாது.

10. பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலேயே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தன்னுடைய கையொப்பத்தினைச் சான்றுப்படுத்திய அனுமதி அட்டையினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

11. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்ட அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றக் கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் உத்தியோகபூர்வ விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவு வழங்கப்பட மாட்டாது.

12. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை நிறுவனத் தலைவரிடம் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரின் மூலம் சான்றுப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

13. இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் உரிய சேவைக்கான நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியொன்றில் இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் விடையளித்தல் வேண்டும். போட்டிப் பரீட்சையின்றி சேவையில் சேர்ந்த அலுவலர்களும் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

14. உத்தியோகத்தர்கள் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வெவ்வேறு தடவைகளிலும் தோற்றலாம். ஆயினும் சித்தியெய்துவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு அரசாங்க முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் இணைப்பு 5 ஐப் பார்க்கவும்.)

15. அரசகரும மொழிக் கொள்கையின் குறிக்கோள்களுக்கு அமைய சகல அலுவலர்களும் தமது விண்ணப்பங்களை அரசகரும மொழியில் தயார்படுத்த வேண்டுமென்பதுடன் அவற்றை அம்மொழியினாலே நிரப்பவும் வேண்டும்.

16. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளின் பெறுபேற்று அட்டவணை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படும். அத்துடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளது பெயர்கள் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.

17. **பரீட்சைத் திட்டம்.**- பரீட்சார்த்திகள் கீழ்க்குறிப்பிடப்படும் பாடங்கள் உள்ளடங்கிய எழுத்துமூலப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும் :

| | பாடம் | காலம் | புள்ளிகள் | பாட இலக்கம் |
|---|---|---|---|---|
| (01) | அலுவலக முறைகளும் நடைமுறையும் | 02 மணித்தியாலங்கள் | 100 | 01 |
| (02) | அரசாங்க அலுவலகங்களில் கையாளப்படும் கணக்கு முறைகள் | 02 மணித்தியாலங்கள் | 100 | 02 |
| | மொத்தம் : | | 200 | |

17.1 ***அலுவலக முறைகளும் நடைமுறையும்.***- அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைகள் தொடர்பான அறிவையும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல் இவ்வினாத்தாளின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.-

பகுதி I - பல்தேர்வு வினாத்தாள் (காலம் : 30 நிமிடம்)
- 25 புள்ளிகள்

பகுதி II - பகுதி கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாத்தாள் - 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (காலம் : 90 நிமிடம்)
- 75 புள்ளிகள்

17.2 ***அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தும் கணக்கு முறைகள்.***- அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தும் கணக்கு முறைகள், கணக்குப் பதிவேடுகள், அதனுடன் தொடர்புடையதாக வெளியிடப்பட்டுள்ள திறைசேரி நிதி ஆலோசனைகள் மற்றும் கட்டளைகள் தொடர்பான அறிவும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல் இவ்வினாத்தாளின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.-

பகுதி I - பல்தேர்வு வினாத்தாள் (காலம் : 30 நிமிடம்)
- 25 புள்ளிகள்

பகுதி II - பகுதி கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாத்தாள் - 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (காலம் : 90 நிமிடம்)
- 75 புள்ளிகள்

18. இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

19. இப்பரீட்சை அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடு காணப்படின் சிங்கள உரையே மேலோங்கும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2017, ஒற்றோபர் 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2013 (I) 2017**

Efficiency Bar Examination for Officers in Grade II of Public Management Assistants' Service – 2013 (I) 2017

(இப்பரீட்சை அறிவிப்பின்படி **இணைந்த சேவைகளில் உள்ள** அரச முகாமை உதவியாளர் சேவையின் தரம் II இன் அலுவலர்கள் மட்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.)

உங்களுக்குரிய சேவை :
(இதைப் பூரணப்படுத்துவதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலின் 5 ஆம் பந்தியின் குறிப்பை நன்கு வாசிக்கவும்.)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 3 இன்படி தாங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தைக் குறிப்பிடவும். (பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
(உதா. : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களை இறுதியிலிட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :————.
உதா. : (GUNAWARDHANA. H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :————.

2. சேவையாற்றும் இடமும் முகவரியும் :-

2.1 அலுவலகம்/ திணைக்களம்/ நிறுவனப் பெயரும் முகவரியும் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ——————.

2.2 அலுவலகம்/ திணைக்களம்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/ தமிழில்) : ——————.

2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :——————.

3. பால் :-

பெண் – 1, ஆண் – 0 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

5. நீங்கள் தோற்ற உள்ள பாடம்/ பாடங்கள் :

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |

6. தற்போது வகிக்கும் பதவி :

6.1 பதவி :——————.

6.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :——————.

6.3 அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் II இற்கு நியமனம் பெற்ற திகதி :——————.

7. 7.1 நீங்கள் பரீட்சைக்கு முதன்முதலாக தோற்றுகின்றீரகளா ? : ——————.

7.2 முதன்முறையாக பரீட்சைக்குத் தோற்றாவிட்டால் செலுத்திய பரீட்சைக் கட்டணம் :——————.

7.3 தபால்/ உப தபால் அலுவலகம் :——————.

7.4 பற்றுச்சீட்டு இலக்கம் :——————.

7.5 திகதி :——————.

பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டி விடவும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.)

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், மேலே காட்டப்பட்டுள்ள மொழி மூலமாக பரீட் சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும், நான் பரீட்சைக்கு .............................. முறையாகத் தோற்றுகின்றேன் என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும்/ ரூபா ............................. பரீட்சைக் கட்டணம் ......................தபால்/ உப தபால் அலுவலகத்திற்கு ................. ஆந் திகதி செலுத்திப் பெற்றுக்கொண்ட ..................... ஆம் இலக்கப் பற்றுச்சீட்டு மேலே ஒட்டப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும், பரீட்சைச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள எல்லா ஏற்பாடுகளுக்கும் நான் உடன்படுகின்றேன் என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

——————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :——————.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அந்தத் திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**

திரு./திருமதி/செல்வி ...................................... எனது அலுவலகத்தில் சேவையாற்றும் அலுவலர் என்றும் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், .................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும், அவர் முதன் முறையாக பரீட்சைக்குத் தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விடுவிக்க முடியும் என்றும்/உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

—————,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :—————.
பதவிப் பெயர் :—————.
முகவரி :—————.
திகதி :—————.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(i) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதென்றும்,
(ii) அலுவலர் இணைந்த சேவையில் உள்ளவர் என்றும்,
(iii) அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன் தோற்றினார்/தோற்றவில்லை* என்றும்,
(iv) அலுவலர் இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியிருப்பதனால் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ள பற்றுச்சீட்டு இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும்,
(v) அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர் என்றும்

இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

* தேவையற்றவைகளை கீறிவிடவும்.

—————,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :—————.
பதவிப் பெயர் :—————.
முகவரி :—————.
திகதி :—————.

11-593

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.